செய்தி வெளியீடு எண்: 226 நாள்: 03.04.2018

## செய்தி வெளியீடு

பயிற்சி காவல் துணை கண்காணிப்பாளர்களின் பயிற்சி நிறைவு விழா இந்திய குடியரசு தலைவர், மத்திய உள்துறை அமைச்சர் மற்றும் தமிழக முதலமைச்சர் பதக்கங்கள் வழங்கும் விழா, 04.04.2018 அன்று மாலை 4.30 மணி அளவில் சென்னை, எழும்பூரில் உள்ள இராஜரத்தினம் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் தமிழ்நாடு தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட–29 (ஆண்கள் 17 மற்றும் பெண்கள் 12) துணை கண்காணிப்பாளர்களின் ஓராண்டுகால பயிற்சி நிறைவுவிழா மற்றும் 2017ஆம் ஆண்டு மத்திய அரசு மற்றும் மாநில அரசினால் சீருடை பணியாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட 201 பதக்கங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, குடிமைப்பணி மற்றும் ஊர்காவல் படையினைச் சார்ந்த சீருடை பணியாளர்களுக்கு வழங்கி கௌரவிக்க உள்ளார்கள். 201 பதக்கங்களில் 159 பதக்கங்கள் காவல்துறையினருக்கும், 17 பதக்கங்கள் சிறைத்துறையினருக்கும், 16 பதக்கங்கள் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையினருக்கும் மற்றும் 09 பதக்கங்கள் ஊர்காவல் படையினருக்கும் வழங்க உள்ளார்கள். மேற்படி, விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பதக்கங்கள் வழங்கி வாழ்த்துரை வழங்கி கௌரவிக்க உள்ளார்கள். பயிற்சி முடித்த காவல் துணை கண்காணிப்பாளர்களின் அணிவகுப்பு மரியாதை மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அரசு உயர்அதிகாரிகளும் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகளும் கலந்து கொள்ள உள்ளார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9